


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 327 | 4 Pages | 22.6.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 327 | 4 பக்கங்கள் | 22.6.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை**

**விளக்கம்:** கிடைத்ததைப் பகுந்து கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும்காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

## சர்வதேச யோகா தினம்: 3 லட்சம் பேர் பங்கேற்கும் கின்னஸ் சாதனை நிகழ்ச்சி: பிரதமர் மோடி பங்கேற்பு



விசாகப்பட்டினம், ஜூன் 22

பிரதமர் மோடி செல்லும் இடமெல்லாம் உடல் நலன் குறித்து பேசி வருகிறார். அப்படி, 2014ம் ஆண்டு ஐ.நா சபையில் உரையாற்றிய பிரதமர் மோடி, யோகாவின் நன்மைகளையும் பெருமையையும்எடுத்துக்கூறி அதனை சர்வதேச தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என பரிந்துரைத்தார். இதற்கு 177 உறுப்பு நாடுகள் ஆதரவு அளித்த நிலையில், 2015ம் ஆண்டு முதல் ஜூன் 21 ம் தேதியை சர்வதேச யோகா தினமாக ஐ. நா சபை அறிவித்தது.

சுமார்200நாடுகளில்யோகாபயிற்சியைமக்கள்மேற்கொண்டுவருகின்றனர். அன்றாட வாழ்வில் யோகா பயிற்சியில் ஈடுபடுவதால் உடல் மற்றும் மனத்திற்குகிடைக்கும்நன்மைகள்குறித்துவிழிப்புணர்வுஏற்படுத்துவதையும், இந்த பண்டைய நடைமுறையை உலகெங்கிலும் உள்ள மக்கள் ஏற்று கொள்ள ஊக்குவிப்பதே சர்வதேச யோகா தினம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்நிலையில் 11வது சர்வதேச யோகா தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி 'ஒரே பூமி, ஒரே ஆரோக்கியம்' என்ற கருப்பொருளில் உலகில் உள்ள 191 நாடுகளில் யோகா நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்தியாவிலும் அனைத்து மாநிலங்களிலும் மக்கள் பெருந்திரளாக பங்கேற்கும் வகையில் யோகா பயிற்சிக்கான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்தியா மற்றும் உலகம் முழுவதும் 8 லட்சம் இடங்களில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த யோகா நிகழ்ச்சியை மிகப்பிரமாண்டமாக நடத்துவதற்கு, ஆந்திர மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தாலும், விசாகப்பட்டினத்தில் கின்னஸ் சாதனை நிகழ்ச்சியாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக துறைமுக நகரமான விசாகப்பட்டினத்தில் உள்ள ஆர்.கே. கடற்கரையில் இருந்து போகபுரம் வரை உள்ள 26 கி.மீ நீள நடைபாதை தேர்வு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து அந்த மாநில முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு கூறுகையில், "சர்வதேச யோகா தினத்தையொட்டி, மாநிலம் முழுவதும் இன்று யோகா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தாலும், கின்னஸ் சாதனை படைக்கும் வகையில் விசாகப்பட்டினத்தில் மிகப்பிரமாண்ட யோகா நிகழ்ச்சி நடத்துகிறோம். ஆர்.கே. கடற்கரையில் காலை 6:30 மணி முதல் காலை 8 மணி வரை நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பங்கேற்க உள்ளனர். 25 ஆயிரம் பழங்குடியின மாணவர்கள் பங்கேற்று, 108 நிமிடங்கள் சூரிய நமஸ்காரம் செய்வார்கள். ஒரே நேரத்தில் மிகப்பெரிய குழு மற்றும் அதிக மக்கள் சூரிய நமஸ்காரம் செய்யும் சாதனையை படைப்பதே இதன் நோக்கம். சிறப்பாக நடைபெறும் இந்த யோகா நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, கலந்து கொண்டு யோகா பயிற்சி செய்ய இருக்கிறார்.

விசாகப்பட்டினத்தில் நடைபெறும் பிரமாண்ட நிகழ்ச்சியில் மக்கள் பங்கேற்பதற்கு வசதியாக 326 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் தலா 1,000 பேர் பங்கேற்று பயிற்சியில் ஈடுபடலாம். அவர்களுக்காக 3.32 லட்சம் டிசர்ட்கள், 5 லட்சம் யோகா பாய்களும் தயார் செய்யப்பட்டுள்ளன. பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை அதிகமானால் அதற்கான மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகிறது" என்று அவர் கூறினார். நிகழ்ச்சியை அமைதியாகவும், சிறப்பாகவும் நடத்துவது குறுத்து, ஆந்திர மாநில போலீஸ் டி.ஜி.பி. ஹரிஷ்குமார் குப்தா கூறுகையில், "யோகா ஆர்வலர்கள் அனைவரும் காலை 6 மணி முதல் 6:30 மணிக்குள் தங்கள் இடங்களுக்குச் செல்ல வேண்டும். விசாகப்பட்டினத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. யோகா பயிற்சி நடைபெறும் பகுதியை கண்காணிக்கும் பணியில் 1,200க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள், டிரோன்கள் ஈடுபடும். மேலும் பாதுகாப்பு பணியில் சுமார் 10 ஆயிரம் போலீசார் ஈடுபடுவார்கள். பிரதமர் மோடி, முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் பங்கேற்பதால் பல அடுக்கு பாதுகாப்பும் செய்யப்பட்டுள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

## மாற்றுத்திறனாளி குழந்தைகள் பாடிய பிறந்தநாள் வாழ்த்துப் பாடல் கண் கலங்கிய திரவுபதி முர்மு

புதுடெல்லி, ஜூன் 22

ஜனாதிபதி திரவுபதி முர்மு ஒடிசாவின் மயூர்பஞ்சில் கடந்த 1958ம் ஆண்டு ஜூன் 20ந்தேதி பிறந்தார். அவருக்கு நேற்று 67வது பிறந்த நாள் ஆகும். இதையொட்டி துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் மற்றும் தலைவர்கள் பலரும் ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்தனர். பிரதமர் மோடி வெளியிட்ட வாழ்த்து செய்தியில், 'பொது சேவை, சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, அனைவருக்கும் நம்பிக்கை மற்றும் பலத்தின் கலங்கரை விளக்கமாகும். ஏழைகள் மற்றும் நலிந்தவர்களுக்கு அதிகாரம் அளிக்க அவர் எப்போதும் பாடுபட்டுள்ளார். மக்கள் சேவையில் அவர் நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை பெறட்டும்' என கூறியிருந்தார். இதைப்போல ஜெய்சங்கர், ராஜ்நாத் சிங் உள்ளிட்ட மத்திய மந்திரிகள் பலரும் ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்து இருந்தனர். இதைப்போல முதல்மந்திரிகள் யோகி ஆதித்யநாத், மம்தா பானர்ஜி, மோகன் சரண் மாஜி, ஒடிசா முன்னாள் முதல்மந்திரி நவீன் பட்நாயக் ஆகியோரும் ஜனாதிபதிக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை கூறியுள்ளனர். காங்கிரஸ் கட்சி வெளியிட்ட வாழ்த்து செய்தியில், நாட்டின் முன்னேற்றம், நலன் மற்றும் நீதிக்கான ஜனாதிபதி முர்முவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, நாட்டை உண்மை மற்றும் நல்லொழுக்கத்தின் பாதையில் தொடர்ந்து வழிநடத்துகிறது என பாராட்டு தெரிவித்து இருந்தது. ஜனாதிபதி திரவுபதி முர்மு தற்போது உத்தரகாண்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். தனது பிறந்த நாளான நேற்று அவர் அங்குள்ள பார்வை மாற்றுத்திறனாளிகள் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். அங்குள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு அவர் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முன்னதாக அந்த குழந்தைகள் பாடல் பாடி ஜனாதிபதிக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர். அவர்களைப்பார்த்து உணர்ச்சி வசப்பட்ட ஜனாதிபதி திரவுபதி முர்மு, கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார். அவர் பேசும்போது, 'என்னால் கண்ணீரை அடக்க முடியவில்லை. மிகவும் அழகாக பாடுகிறார்கள். தங்கள் இதயத்தில் இருந்து பாடினார்கள்' என பாராட்டினார். மேலும் அவர், 'இந்திய வரலாறு முழுவதும் மனிதாபிமானம் மற்றும் உள்ளடக்கத்தால் நிறைந்துள்ளது. மாற்றுத்திறனாளிகளை மேம்படுத்துவதற்கும், அவர்கள் வளர சம வாய்ப்புகளை வழங்குவதற்கும் அரசின் கொள்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இன்றைய சகாப்தம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் சகாப்தம். மேம்பட்ட தொழில்நுட்பத்தின் உதவியுடன், மாற்றுத் திறனாளிகள் கூட முக்கிய நீரோட்டத்திற்கு பங்களிக்க முடியும்' என்றும் கூறினார்.

# உயர்கல்வி நிறுவனங்களை சிறுநகரங்களிலும் உருவாக்கி வருகிறது திராவிட மாடல் அரசு: உதயநிதி ஸ்டாலின்

சென்னை , ஜூன் 22

துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் ,

ஒரு காலத்தில் எட்டாக்கனியாக இருந்தஉயர்கல்வியைமுத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எல்லோருக்கும் சென்று சேர திட்டங்களை தீட்டினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில், மாநகரங்களில் இருக்கும் உயர்கல்வி நிறுவனங்களை சிறுநகரங்களிலும் உருவாக்கி வருகிறது நம் திராவிட மாடல் அரசு.




அந்த வகையில், முதல்அமைச்சர் முக ஸ்டாலின் அவர்கள், வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம், திருச்சி மாவட்டம் துறையூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் ஆகிய இடங்களில் 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் செயல்பாட்டினை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்தார்கள். இந்த சிறப்புக்குரிய நிகழ்வில் நாம் பங்கேற்றோம்.

மேலும், வேலூர் சேர்க்காட்டில் ரூ.36.18 கோடி மதிப்பில் திருவள்ளுவர்பல்கலைக்கழகதுணைவேந்தர், உதவி பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்காக கட்டப்பட்டுள்ள குடியிருப்பையும் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு உயர்கல்வியிலும் இந்தியாவுக்கு வழிகாட்டட்டும்.நம் மாணவர்கள் கல்வியால் உலகை வெல்லட்டும். என தெரிவித்துள்ளார் .

## அரசு மருத்துவமனை தொடங்கி புஷ்பா தியேட்டர் வந்து சேர்வதற்குள் 6 இடங்களில் வாகனங்களை கும்பலாக நின்று வழிமறித்து ஃபைன் போடுகிறார்கள் திருப்பூர் மாநகர போக்குவரத்து காவல்துறையினர்

அரசு மருத்துவமனை தொடங்கி புஷ்பா தியேட்டர் வந்து சேர்வதற்குள் 6 இடங்களில் வாகனங்களை கும்பலாக நின்று வழிமறித்து ஃபைன் போடுகிறார்கள் திருப்பூர் மாநகர போக்குவரத்து காவல்துறையினர்.

ஒவ்வொரு ஸ்டேசனுக்கும் 200 கேஸ்கள் இலக்காம். ஒரு நாளைக்கா ஒரு மாதத்துக்கா என்று தெரியவில்லை. இருக்கும் வேகத்தைப் பார்த்தால் ஒரு நாளில் ஆறுமணி நேரத்திற்குள் இலக்கை எட்டிவிடுவார்கள் என்பதை யூகிக்க முடிகிறது.

ஹெல்மெட்டோ, சீட்பெல்ட்டோ அல்லது செல்போனோ மினிமம் ரூ.1000/ ஃபைன் (ரசீது கொடுத்துவிடுகிறார்கள்) என்றாலும் திருப்பூரில் இருக்கும் ஸ்டேசன்களின் எண்ணிக்கையை வைத்துப்பார்த்தால் குறைந்தது 12 இலட்சம் இலக்கு.

உங்கள் பாதுகாப்புக்காத்தானே இதெல்லாம் என்று சமாதானம் சொல்லிக்கொண்டிருந்த போலீஸ்காரரிடம் அவ்வளவு அக்கறை இருந்தா தோண்டிப்போட்ட ரோட்டை ஒழுக்கமா போடச்சொல்லுங்கய்யா என்றவாறே ரசீதைபிடுங்கிக்கொண்டுகிளம்பினார்



அந்த டுவீலர்காரர்.

லட்சக்கணக்கான தொழிலாளர்கள் அன்றாட வேலைகளுக்கு இருசக்கர வாகனங்களைபயன்படுத்தும்திருப்பூரில் இப்படி இலக்கு நிர்ணயித்து ஃபைன் போடுவது மிகமோசமான செயல்.

## திருத்துறைப்பூண்டி தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சிலம்பம் பயிற்சி

திருவாரூர் மாவட்டம், ஜூன் 19 ,திருத்துறைப்பூண்டி தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சிலம்பம் பயிற்சி துவங்கப்பட்டது. இதில் 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு, சிலம்பம் பயிற்சியில் இணைந்துள்ளனர். இவ்விழாவில் முத்து ஸ்போர்ட்ஸ் அகாடமி செங்காந்தள் சிலம்பம் கலைக்கூடம் தலைமை பயிற்சியாளர் முத்துக்கும ரன் வரவேற்புரையாற்றினார். இவ்விழாவில் தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் ப.வின்செண்ட் ஆரோக்கியராஜ் மாணவர்களை வாழ்த்தி சிறப்புரையாற்றினார். பயிற்சியில் சேர்ந்த மாணவர்களுக்கு சிலம்ப ஸ்டிக் வழங்கி சிறப்பித்தார். பயிற்சியாளர் அனுஷா, அஜிதா ரிஷா ஆகியோர் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர்.



மேலும் விழா முடிவில் பயிற்சியாளர் அருள்ராஜ் நன்றியுரை வழங்கினார்.

## திருப்பூர் அருகே முகமூடி அணிந்து கையில் அரிவாளுடன் சுற்றி திரிந்த மர்ம நபர் மக்கள் அச்சம்

திருப்பூர் அருகே நாச்சிபாளையம் பகுதியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. கடந்த 17ம் தேதி முகமூடி அணிந்த நபர், கையில் அரிவாளுடன் அங்கும் இங்கும் சுற்றித்திரிந்தார்.

செல்லும் வழியில் உள்ள வீடுகளின் கதவுகளை அரிவாளால் தட்டியபடியே அந்நபர் சென்றதால் பொதுமக்கள் அச்சமடைந்தனர். சிலர் வெளியே வந்து பார்த்தபோது, முகமூடி அணிந்த நபர் சுற்றித்திரிவதைகண்டுசத்தமிட்டனர்.


அவர்களை அரிவாளால் காட்டி மிரட்டிவிட்டு அந்நபர் அங்கிருந்து தப்பினார். மறுநாள் காலை சாலையில் அரிவாள் கிடந்தது. இது தொடர்பான தகவலின்பேரில், அவிநாசிபாளையம் போலீஸார் அங்கு வந்து, அப்பகுதியில் இருந்த வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கேமராக்களில் பதிவான காட்சிகளை கைப்பற்றி விசாரித்தனர். அதில் மர்மநபர் நடமாட்டம் உறுதியானது.

இது தொடர்பாக அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறும்போது, 'ஏற்கெனவே எங்கள் பகுதியில் ஒரே குடும்பத்தை 3 பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தின் அதிர்ச்சியில் இருந்து பலரும் மீளாத நிலையில், தற்போது மர்ம நபரின் நடமாட்டத்தை கண்டு அச்சமடைந்துள்ளோம். போலீஸார் தொடர்ச்சியாக ரோந்துப் பணிகளை தீவிரப்படுத்த வேண்டும். முக்கிய சந்திப்புகளில் கண்காணிப்புக் கேமராக்களை பொருத்த போலீஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

இதுதொடர்பாக திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரிஷ்யாதவ் கூறியதாவது: அவிநாசி பாளையம் எல்லைக்கு உட்பட்ட ஜிஎன் கார்டன் குடியிருப்புப் பகுதியில் அரிவாளுடன் சுற்றித்திரிந்த இளைஞரை அடையாளம் கண்டு, அவரை பிடித்து விசாரித்தோம்.

அவர், சற்று மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதும், மணியம்பாளையத்தை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது. கோவை தனியார் கல்லூரியில் 3ம் ஆண்டு படித்து வந்த நிலையில், மனநலம் பாதிக்கப்பட்டுள்ளார். திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதும் தெரியவந்தது.



சம்பவத்தன்று பெற்றோரிடம் உடற்பயிற்சி நிலையத்துக்கு செல்வதாக கூறிவிட்டு, அரிவாளை எடுத்துக் கொண்டு சம்பவ இடத்தில் சுற்றித்திரி ந்தார். அவரது பெற்றோரிடம் பேசி அனுப்பி வைத்துள்ளோம். திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்று வருகிறார், என்றார்.

## பி.எட் மாணவர் சேர்க்கை விண்ணப்ப பதிவு தொடக்கம்; ஜூலை 18ந்தேதி தரவரிசை பட்டியல் வெளியீடு

சென்னை, ஜூன் 22

தமிழக உயர்கல்வித்துறையின் கீழ் 7 அரசு கல்வியியல் கல்லூரிகள், 21 அரசு உதவிப் பெறும் கல்வியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதற்கான 202526ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கை ஆன்லைன் விண்ணப்ப பதிவு தொடங்கியுள்ளது.

பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்கள், www.tngasa.in என்ற இணையதளத்தில் அடுத்த மாதம் (ஜூலை) 9 ந்தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். பி.எட். மாணவர் சேர்க்கைக்கான தரவரிசை பட்டியல் ஜூலை 18ந்தேதி வெளியாகிறது. கலந்தாய்வு ஜூலை 21ந்தேதி முதல் 25 ந்தேதி வரை நடைபெற உள்ளது.

மாணவர் சேர்க்கை இடஒதுக்கீடு ஆணை ஜூலை 28ந்தேதி நடைபெறும். ஆகஸ்ட் 6ந்தேதி அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பி.எட் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் தொடங்கும் என உயர்கல்வித்துறை தெரிவித்துள்ளது.




திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை, கொடைரோடு, அம்மையநாயக்கனூர் ஆகிய பகுதிகளில், தமிழக வெற்றிக் கழகம் நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதி, திண்டுக்கல் மத்திய மாவட்டம் சார்பாக விஜய் பிறந்தநாளை முன்னிட்டு ஒட்டப்பட்டிருக்கும் போஸ்டர்களால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



# டாஸ்மாக் முறைகேடு வழக்கில் நீதிபதிகளின் தீர்ப்பால் அமலாக்கத்துறையின் அவலநிலை அம்பலம். வழக்கறிஞர்கள் குமுறல்..



டாஸ்மாக் முறைகேடு புகாரில் திரைப்பட தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன், தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரன் ஆகியோருக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை என சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு அமலாக்கத்துறையின் அவலத்தை அம்பலம்படுத்தியுள்ளதாக வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயிரம் கோடி ரூபாய் டாஸ்மாக் முறைகேடு புகார் தொடர்பாக, திரைப்பட தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன், தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரன் ஆகியோரின் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தி சீல் வைத்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எம்.எஸ். ரமேஷ் மற்றும் வி.லட்சுமி நாராயணன் அமர்வு

டாஸ்மாக் முறைகேட்டில் தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன் மற்றும் தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரன் ஆகியோருக்கு தொடர்பு உள்ளது என்பதற்கு அமலாக்கத் துறையிடம் எந்த ஆதாரங்களும் இல்லை எந்த ஆதாரங்களும் இல்லாத நிலையில், இருவரின் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் சோதனை நடத்தவும், பறிமுதல் செய்யவும் அமலாக்கத் துறைக்கு எந்த அதிகார வரம்பும் இல்லை எனக் கூறி, அமலாக்கத் துறையின் மேல் நடவடிக்கைகளுக்கு இடைக்கால தடை விதித்து அதிரடியாக உத்தரவிட்டுள்ளனர்.

சட்டவிரோத பண பரிவர்த்தனை சட்ட பிரிவு 17ன்கீழ் தகவலின் அடிப்படையில், எந்தவொரு நபரும் பணமோசடி செய்யும் எந்தவொரு செயலையும் செய்துள்ளார் அல்லது பணமோசடியில் தொடர்புடைய குற்றத்தின் எந்தவொரு வருமானத்தையும் வைத்திருக்கிறார் அல்லது பணமோசடி தொடர்பான எந்தவொரு ஆதாரங்களை வைத்திருக்கிறார் என்று நம்புவதற்கு காரணம் இருந்தால், சாவிகள் கிடைக்காத போது எந்தவொரு கதவின் பூட்டையும் உடைக்க அல்லது சோதனையின் போது காணப்படும் எந்தவொரு சொத்தின் ஆவணங்கள் கைப்பற்ற சம்பந்தப்பட்ட இடத்தில் நுழைய, தேட, அங்கீகரிக்க அதிகாரம் அளிக்கிறது.

ஆனால் இதோ ஆதாரம் என அறிக்கையை மட்டுமே அமலாக்கத் துறை சமர்ப்பித்தது என்றும் அது மனுதாரரைப் பற்றி தகவல் என்று கூறி, தேடுதல் நடவடிக்கைகளைத் தொடங்க வழிவகுத்தது என அமலாக்கத் துறை கூறினாலும், அந்த சுருக்கமான அறிக்கை, நம்புவதற்கான காரணம் குறித்து இயக்குநரகம் வைத்திருப்பதாகக் கூறும் தகவல் அல்லது பொருட்களுடன்தொடர்புடையது அல்ல.

இதன்மூலம் மனுதாரர்களில்சொந்தமானஇடங்களில், சோதனை மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அமலாக்கத்துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், முற்றிலும் அதிகாரம் அல்லது அதிகார வரம்பு இல்லாதது என்று நீதிபதிகள் தெரிவித்திருப்பது அமலாக்கத்துறையின் அவலத்தை அம்பலப்படுத்தி உள்ளதாக எஸ். குமாரதேவன், (சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்), சி.கனகராஜ், (சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்) கே.திலகேஸ்வரன், (சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்) வழக்கறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், அமலாக்கத் துறை, சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, குற்றத்திற்கான எந்தவொரு ஆவணமோ அல்லது ஆதாரங்களோ அவர்களிடம் இல்லை எனவும் உயர் நீதிமன்றம் அமலாக்கத்துறை மீது தனது அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளது என்றனர்.

# சிறுமியை தாக்கி இழுத்துச்சென்ற சிறுத்தை.. கோவையில் அதிர்ச்சி சம்பவம்



கோவை, ஜூன் 22

கோவை மாவட்டம் வால்பாறை பகுதியானது தேயிலை தோட்டங்கள் நிறைந்த பகுதியாகும். இங்கு தமிழகம், கேரளா மற்றும் வட மாநிலங்களான பீகார், ஜார்கண்ட் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த தொழிலாளர்கள் தங்கியிருந்து வேலை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், வால்பாறை அருகே உள்ள பச்சைமலை எஸ்டேட்டில் வடமாநில பெண் தொழிலாளி ஒருவர், தனது வீட்டின் பின்புறம் தனது 6 வயது மகளுடன் தண்ணீர் பிடித்துக்கொண்டு இருந்தார். அப்போது, தண்ணீர் குடத்தை வீட்டிற்குள் வைத்துவிட்டு வருவதற்குள், வெளியே நின்றுகொண்டிருந்த சிறுமியை சிறுத்தை தாக்கி இழுத்துச் சென்றுள்ளது.

இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த சிறுமியின் தாய் கத்தி கூச்சலிட்டார். உடனடியாக அக்கம்பக்கத்தினர் விரைந்து வந்து சிறுமியை தேடும் பணியில் ஈடுபட்டனர். சம்பவம் குறித்து தகவல் அறிந்த போலீசார் மற்றும் வனத்துறையினரும் சிறுமியை தொடர்ந்து தேடி வருகின்றனர். சிறுமியின் நிலை என்ன ஆனது என்று இன்னும் தெரியவரவில்லை. வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்த சிறுமியை சிறுத்தை இழுத்துச் சென்ற சம்பவம் வால்பாறையில் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# திருமாவளவனுக்கு எதிரான தேர்தல் விதிமீறல் வழக்கு ரத்து: சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை ஜூன் 22

கடந்த 2019ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தலில் சிதம்பரம் தொகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் போட்டியிட்டார். அவருக்கு ஆதரவாக அரியலூர் மாவட்டம் இலந்தைக்கூடத்தில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. இரவு 10 மணிக்குள் பிரசாரத்தை முடிக்க வேண்டும். ஆனால், தேர்தல் விதியை மீறி, 4 நிமிடங்கள் கூடுதலாக பிரசாரம் செய்ததாக திருமாவளவனுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

அரியலூர் கோர்ட்டில் நிலுவையில் உள்ள இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி திருமாவளவன் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி வேல்முருகன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, திருமாவளவன் தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதங்களை ஏற்றுக் கொண்டு அவருக்கு எதிரான வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டார்.

# குடும்ப பிரச்சினையில் மனைவிக்கு அரிவாள் வெட்டு: கணவன் கைது





திருநெல்வேலிஜூன்22

திருநெல்வேலி மாவட்டம், மானூர், ராமையன்பட்டி, சங்குமுத்தம்மாள் புரத்தைச்சேர்ந்தகண்ணன் (வயது 48), அங்காளஈஸ்வரி(44) ஆகிய இருவரும் கணவன் மனைவி ஆவர். கண்ணன், அங்காளஈஸ்வரியிடம் அடிக்கடி பிரச்சினை செய்து தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று கண்ணன் மீண்டும் அங்காளஈஸ்வரிடம் பிரச்சினை செய்துபோது, அதனை அங்காளஈஸ்வரி தட்டி கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த கண்ணன், அவரை பெண் என்றும் பாராமல் அவதூறாக பேசி அரிவாளால் தாக்கி ரத்தக் காயம் ஏற்படுத்தியதோடு மிரட்டல் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அங்காளஈஸ்வரி மானூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் விஜயகுமார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு கண்ணனை இன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார்.

# திருப்பூர்: செல்போன் அதிகநேரம் பயன்படுத்துவதை பெற்றோர் கண்டித்ததால் சிறுவன் தற்கொலை



திருப்பூர், ஜூன் 22

திருப்பூர் மாவட்டம் அலங்கியம் பகுதியை சேர்ந்த 13 வயது சிறுவன் சித்தார்த் அப்பகுதியில் உள்ள பள்ளியில் கல்வி பயின்று வந்தான். இதனிடையே, சிறுவன் சித்தார்த் பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்ததும் அதிக நேரம் செல்போன் பயன்படுத்துவதை வழக்கமாக கொண்டுள்ளான். குறிப்பாக சில கேம்களை செல்போனில் விளையாடியுள்ளான். செல்போனை அதிக நேரம் பயன்படுத்த வேண்டாம் என்று சித்தார்த்தின் பெற்றோர் கண்டித்துள்ளனர்.

இந்நிலையில், வழக்கம்போல இன்றும் பள்ளிக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்த சிறுவன் சித்தார்த் மீண்டும் செல்போனை அதிக நேரம் பயன்படுத்தி கேம் விளையாடியுள்ளான். இதனால், செல்போனை அதிக நேரம் பயன்படுத்தாதே என்று பெற்றோர் கூறியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த சித்தார்த் வீட்டில் இருந்த விஷத்தைகுடித்துள்ளான். இதனால் சித்தார்த் வீட்டில் உள்ள அறையில் மயங்கி விழுந்துள்ளானர்.

இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர் சித்தார்த்தை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு சித்தார்த்தை பரிசோதித்த டாக்டர்கள், சிறுவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக அறிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாகவழக்குப்பதிவுசெய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வால்பாறை அதிமுக சிட்டிங் எம்.எல்.ஏ அமுல் கந்தசாமி உடல்நலக்குறைவால் மரணம்



வால்பாறை அதிமுக எம்.எல்.ஏ அமுல் கந்தசாமி உடல் நலக்குறைவால் காலமானார். கோவை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்த அமுல் கந்தசாமி இன்று பிற்பகல் சிகிச்சைபலனின்றி காலமானார்.

வால்பாறை அதிமுக எம்.எல்.ஏ அமுல் கந்தசாமி உடல் நலக்குறைவால் காலமானார்.அவருக்கு வயது 60. கோவை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்த அமுல் கந்தசாமி இன்று பிற்பகல் சிகிச்சைபலனின்றி காலமானார். எம்.ஜி.ஆர் இளைஞர் அணி துணைச்செயலாளராக பொறுப்பு வகித்தார். சிட்டிங் எம்.எல்.ஏ மறைவால் அந்த தொகுதி காலியாகியுள்ளது.

வால்பாறை தொகுதி எம்.எல்.ஏ கோவை மாவட்டத்தை சேர்ந்தவர் அமுல் கந்தசாமி (வயது 60). இவர் கடந்த 2021 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் கோவை மாவட்டம் வால்பாறை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்த நிலையில் அவருக்கு கடந்த சில நாட்களாக உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதனால் அவரது குடும்பத்தினர் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இன்று காலையில் தமிழக எதிர்க்கட்சி தலைவரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமிஅமுல்கந்தசாமியை மருத்துவமனைக்கு நேரில் சென்று அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார். அப்போது அவருடன் முன்னாள் அமைச்சர் எஸ்.பி வேலுமணி, மாவட்டச் செயலாளர் அம்மன் அர்ச்சுணன் எம்எல்ஏ, நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

தொடர்ந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், இன்று பிற்பகல் அவரது உடல்நிலை மோசமடைந்தது. பிற்பகல் 3.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். அவர் உயிரிழந்தச் செய்தி கேட்டு குடும்பத்தினர்கள் கதறி அழுதனர். அதிமுக தொண்டர்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

எடப்பாடி பழனிசாமி இரங்கல்

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எம். ஜி. ஆர். இளைஞர் அணி துணைச் செயலாளரும், கோவை புறநகர் தெற்கு மாவட்டம், வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான திரு. தி.க. அமுல் கந்தசாமி உடல்நலக் குறைவால் தனியார் மருத்துவமனையில் அனுதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகி ச்சை பலனின்றி மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

கழகத்தின் மீதும், கழகத் தலைமையின்மீதும்மிகுந்த விசுவாசம் கொண்டு பணியாற்றி வந்த அன்புச் சகோதரர் அமுல் கந்தசாமி, மாவட்ட மாணவர் அணிச் செயலாளர், மாவட்ட எம். ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் திறம்பட கழகப் பணிகளை ஆற்றியவர். அதே போல், கோவை மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவராகவும், தற்போது வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் நல்ல முறையில் மக்கள் பணியாற்றிவர்.


அன்புச் சகோதரர் அமுல் கந்தசாமி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்ினருக்கும், உறவினர்களுக்கும், இந்தத்துயரத்தைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் அளிக்க வேண்டும் என்றும், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

இடைத்தேர்தல் எப்போது?

ஒரு தொகுதியின் எம்.எல்.ஏ உயிரிழந்துவிட்டால், இதுபற்றி உடனடியாக தேர்தல் ஆணையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இதனை தொடர்ந்து தேர்தல் ஆணையமும் அந்தத் தொகுதியை காலியானதாக அறிவிக்கும்.

ஒரு தொகுதி காலியானதாக தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டால், அடுத்த 6 மாதத்திற்குள் அந்த தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனவே வால்பாறை தொகுதிக்கு வரும் டிசம்பர் மாதத்திற்குள் இடைத்தேர்தல்அறிவிக்கப்படவாய்ப்பு உள்ளது.

# மாமல்லபுரம் புராதன சின்னங்களை கட்டணமின்றி சுற்றிப்பார்க்கலாம்



செங்கல்பட்டு, ஜூன் 22

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் பல்வேறு புராதன சின்னங்கள் உள்ளன. இங்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து புராதன சின்னங்களை கண்டுகளித்து வருகின்றனர். இந்த புராதன சின்னங்கள் தொல்லியல்துறை கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்நிலையில், சர்வதேச யோகா தினம் நாளை (ஜுன் 21 ) கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி, மாமல்லபுரத்தில் உள்ள புராதன சின்னங்களை சுற்றுலா பயணிகள் நாளை கட்டணமின்றி இலவசமாக சுற்றிப்பார்க்கலாம் என்று தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.

# திருப்பூர் மாவட்ட வருவாய்த்துறையில் நிர்வாக நலன் கருதி 11 தாசில்தார்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் தகவல்

திருப்பூர்: திருப்பூர் மாவட்ட வருவாய்த்துறையில் நிர்வாக நலன் கருதி 11 தாசில்தார்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார் திருப்பூர் நெடுஞ்சாலை அலகு4 நில எடுப்பு தனிதாசில்தாராக இருந்த சாந்தி திருப்பூர் தெற்கு சமூக பாதுகாப்பு திட்ட தனிதாசில்தாராகவும், அவினாசி சமூக பாதுகாப்பு திட்ட தனிதாசில்தாராக இருந்த ஜெகநாதன் திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை அலகு4 நிலம் எடுப்பு தனிதாசில்தாராகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்ட அறிவிப்பில் கூறுகையில், "திருப்பூர் மாவட்ட தேர்தல் தனி தாசில்தாராக இருந்த தங்கவேல் தாராபுரம் கோட்ட கலால் அலுவலராகவும், காங்கயம் ஆதிதிராவிடர் நல நில எடுப்பு தனிதாசில்தாராக இருந்த நந்தகோபால் திருப்பூர் ஆர்.டி.ஓ. நேர்முக உதவியாளராகவும், திருப்பூர் ஆர்.டி.ஓ. நேர்முக உதவியாளராக இருந்த கனகராஜன் திருப்பூர் மாவட்ட தேர்தல் தனிதாசில்தாராகவும், தாராபுரம் கோட்ட கலால் அலுவலராக இருந்த ஜெகஜோதி காங்கயம் ஆதிதிராவிடர் நல நில எடுப்பு தனிதாசில்தாராகவும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திருப்பூர் நெடுஞ்சாலை அலகு4 நில எடுப்பு தனிதாசில்தாராக இருந்த சாந்தி திருப்பூர் தெற்கு சமூக பாதுகாப்பு திட்ட தனிதாசில்தாராகவும், அவினாசி சமூக பாதுகாப்பு திட்ட தனிதாசில்தாராக இருந்த ஜெகநாதன் திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை அலகு4 நிலம் எடுப்பு தனிதாசில்தாராகவும், திருப்பூர் தெற்கு சமூக பாதுகாப்பு திட்ட தனிதாசில்தாராக இருந்த ஜலஜா மடத்துக்குளம் சமூக பாதுகாப்பு திட்ட தனிதாசில்தாராகவும், மடத்துக்குளம் சமூக பாதுகாப்பு திட்ட தனிதாசில்தாராக இருந்த கண்ணாமணி மாவட்ட வழங்கல் அதிகாரியின் நேர்முக உதவியாளராகவும், மாவட்ட வழங்கல் அதிகாரியின் நேர்முக உதவியாளராக இருந்த ராகவி மாவட்ட வழங்கல் துறை பறக்கும்படை தனிதாசில்தாராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருப்பூர் வடக்கு குடிமைப்பொருள் தனிதாசில்தாராக இருந்த உஷாராணி அவினாசி சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தாராகவும், திருப்பூர் தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் சில்லறை விற்பனை உதவி மேலாளராக இருந்த கோவிந்தசாமி திருப்பூர் வடக்கு குடிமைப்பொருள் தனிதாசில்தாராகவும் நியமிக்கப்பட்டு ள்ளனர்.

திருப்பூர் மாவட்ட வருவாய்த்துறையில் 17 துணை தாசில்தார் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதன்படி, திருப்பூர் மாநகராட்சி தேர்தல் துணை தாசில்தாராக இருந்த வசந்தா திருப்பூர் தெற்கு வட்ட வழங்கல் அலுவலராகவும், உடுமலை மண்டல துணை தாசில்தாராக இருந்த சந்திரசேகர் மடத்துக்குளம் வட்ட வழங்கல் அலுவலராகவும், மடத்துக்குளம் வட்ட வழங்கல் அலுவலராக இருந்த தினேஷ்ராகவன் உடுமலை மண்டல துணை தாசில்தாராகவும், திருப்பூர் மாவட்ட தேர்தல் துணை தாசில்தாராக இருந்த மணிமேகலை திருப்பூர் மாவட்ட ஈ பிரிவு தலைமை உதவியாளராகவும், திருப்பூர் வடக்கு தேர்தல் துணை தாசில்தாராக இருந்த ரம்யா திருப்பூர் தெற்கு தலைமையிடத்து துணை தாசில்தாராகவும், திருப்பூர் தெற்கு வட்ட வழங்கல் அலுவலராக இருந்த ராசு திருப்பூர் வடக்கு தலைமையிடத்து துணை தாசில்தாராகவும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு துணை தாசில்தாராக இருந்த சரவணக்குமார் ஊத்துக்குளி மண்டல துணை தாசில்தாராகவும், திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு துணை தாசில்தாராக இருந்த வளர்மதி மடத்துக்குளம் தலைமையிடத்து துணை தாசில்தாராகவும், திருப்பூர் வடக்கு தலைமையிடத்து துணை தாசில்தாராக இருந்த லோகநாதன் கலெக்டர் அலுவலக ஆ பிரிவு தலைமை உதவியாளராகவும், மடத்துக்குளம் தலைமையிடத்து துணை தாசில்தாராக இருந்த விஷ்ணுகண்ணன் கலெக்டர் அலுவலக ஒ பிரிவு தலைமை உதவியாளராகவும், மாவட்ட வருவாய் அலகு துணை தாசில்தாராக இருந்த மகேஸ்வரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகதலைமைஉதவியாளராகவும்நியமிக்கப்பட்டுள்ளனர்

கலெக்டர் அலுவலக ஈ பிரிவு தலைமை உதவியாளராக இருந்த அருண்குமார் திருப்பூர் வடக்கு தேர்தல் துணை தாசில்தாராகவும், திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு துணை தாசில்தாராக இருந்த ஸ்ரீநந்தினி அவினாசி தேர்தல் துணை தாசில்தாராகவும், அவினாசி தேர்தல் துணை தாசில்தாராக இருந்த சாந்தி அவினாசி தலைமையிடத்து துணை தாசில்தாராகவும் மாற்றப்பட்டுள்ளார்கள்.

திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு துணை தாசில்தாராக இருந்த கலாவாணி டாஸ்மாக் கிடங்கு உதவி மேலாளராகவும், கலெக்டர் அலுவலக தேர்தல் துணை தாசில்தாராக (1) இருந்த மைவிழி கலெக்டர் அலுவலக தேர்தல் துணை தாசில்தாராகவும் (2), மாவட்ட சமூக பாதுகாப்பு திட்ட தலைமை உதவியாளராக இருந்த பிரேமலதா கலெக்டர் அலுவலக உழவர் பாதுகாப்பு திட்ட தலைமை உதவியாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்" இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புறநகர் மின்சார ரெயில்களில் செல்போன் திருட்டில் ஈடுபட்ட இளைஞர் கைது



சென்னை ஜூன் 22

சென்னை புறநகர் மின்சார ரெயில்களில் பயணிகளின் செல்போன்களை திருடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. திருட்டில்ஈடுபடும்திருடர்களை கைது செய்ய ரெயில்வே போலீசார் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், புறநகர் மின்சார ரெயில்களில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி பயணிகளின் செல்போன்களை திருடிய வெங்கடேஷ் என்பவரை ரெயில்வே போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட வெங்கடேஷ் ஆந்திராவை சேர்ந்தவர் என்பது விசாரணையில் தெரியவந்தது. மேலும், அவரிடமிருந்து 24 திருட்டு செல்போன்களையும் போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

## தூத்துக்குடியில் தந்தையை கொலை செய்த மகனுக்கு ஆயுள் தண்டனை

தூத்துக்குடி ஜூன் 22

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சோனகன்விளை பகுதியைச் சேர்ந்த தங்கவேல் மகன் முத்து (வயது 83), கடந்த 8.6.2022 அன்று அவரது வீட்டில் உடல்நல குறைவோடு இருந்துள்ளார். அப்போது அங்கு வந்த அதே பகுதியைச் சேர்ந்த அவரது மகன் சுடலைமணி (51), தந்தை முத்துவை மருத்துவமனைக்கு அழைத்துள்ளார். இதற்கு முத்துவும் அவரது மனைவி ரோஜாவும் (68) மருத்துவமனைக்கு வருவதற்கு மறுப்பு தெரிவித்து சுடலைமணியிடம் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த சுடலைமணி தாய் ரோஜாவையும் தந்தை முத்துவையும் கம்பால் தாக்கியதில் முத்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து குரும்பூர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து சுடலைமணியை கைது செய்தனர்.



இவ்வழக்கின் விசாரணை தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி முருகன் இன்று குற்றவாளி சுடலைமணிக்கு ஆயுள் தண்டனை, ரூ.3,000 அபராதம் மற்றும் 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை, ரூ.1,000 அபராதம் விதித்து மேற்சொன்ன தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய குரும்பூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ராமகிருஷ்ணன், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் எல்லம்மாள், விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு எப்சி ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பாராட்டினார்.

## யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் ஊக்கத்தொகை பெற விண்ணப்பிக்கலாம்

சென்னை ஜூன் 22

யு.பி.எஸ்.சி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி மேற்கொள்ள ஊக்கத்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது துணை முதல் அமைச்சரால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது. அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் மத்திய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில் 2023 24க்கான தமிழ்நாடு அரசின் பட்ஜெட் உரையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் (TNSDC), அகில இந்திய குடிமைப் பணி தேர்வு மையத்துடன் (AICSCC) இணைந்து, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்காக பயின்று வரும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இதர தேவையான வசதிகளைச்செய்து உதவும் வகையில் ஒரு திட்டத்தை செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ். ஒவ்வொரு ஆண்டும் 1,000 சிவில் சர்வீசஸ் பயின்று வரும் மாணவர்கள், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம்



ரூ.7,500 வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும். இத்திட்டம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கடந்த 2023ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 2025ம் ஆண்டின் யு.பி.எஸ்.சி முதல்நிலை தேர்வில் (25.05.2025) தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக 25,000 ரூபாய் நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

இந்த ஊக்கத்தொகையைப் பெறுவதற்கு நடப்பு ஆண்டில் (2025) யு.பி.எஸ்.சி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், *https://portal.naanmudhalvan.tn.gov.in/upsc_registration/* என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவிக்கையைப் படித்து பார்த்து, 21.06.2025 முதல் 02.07.2025 வரை விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாமக்கல்: கோவிலுக்குள் சிசிடிவி கேமரா பொருத்த அர்ச்சகர்கள் எதிர்ப்பு

நாமக்கல், ஜூன் 22

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் மலை கோயிலின் அர்த்த மண்டபத்தில் சிசிடிவி கேமரா பொருத்த அர்ச்சகர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். கையில் பதாகைகளை ஏந்தி கோவிலை சுற்றி வந்து கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மரகத லிங்கத்தை பாதுகாக்க ஆகம விதிகளுக்கு முரணாக அர்த்த மண்டபத்தில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தும் கோவில் நிர்வாகத்தின் நடவடிக்கைகளுக்கு அர்ச்சகர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இது தங்களையும், பக்தர்களையும் புண்படுத்தும் செயல் என்றும், இதனை கேட்டால் அதிகாரிகள்



தங்களை மிரட்டுவதாகவும் அர்ச்சகர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

## 2026 சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் சார்பில் அதிக இடங்களை கேட்போம் விஜய் வசந்த்

கன்னியாகுமரி, ஜூன் 22

நாகர்கோவிலில் விஜய்வசந்த் எம்.பி. செய்தியளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது,

நம் நாட்டில் வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கன்னியாகுமரி நான்கு வழிச்சாலை பணிகள் வேகமாக நடந்து வருகிறது. ஓராண்டுக்குள் முடிக்க வேண்டும் என்று முடிவு செய்து பணி வேகமாக நடக்கிறது. மழை காரணமாக வேலை தாமதம் ஏற்பட்டது.

வேகப்படுத்த அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணி வலுவாக கூட்டணியாக உள்ளது. வெற்றி கூட்டணியாக உள்ளது.



தேர்தல் தொடர்பாக தலைவர்களை சந்தித்து அதற்கான நல்ல முடிவை தருவார்கள். வரும் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் அதிக இடங்கள் கேட்டு கோரிக்கை வைப்போம். ஆட்சியில் பங்கு வேண்டும் என்று கேட்க வேண்டும் என்று தொண்டர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். பேச்சுவார்த்தையில் இது தொடர்பாக முடிவு செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



சேலம் ஜூன் 22

காவிரி ஆற்றின் குறுக்கே மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் மேட்டூரில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது. அதே வேளை டெல்டா பாசனத்திற்காக கடந்த 12ம் தேதி முதல் மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரித்துள்ளது. அதன்படி, நிலவரப்படி அணையின் நீர்வரத்து விநாடிக்கு 16,341 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 113.58 அடியாகவும், நீர் இருப்பு 83.601 டி.எம்.சி.ஆகவும் உள்ளது. டெல்டா பாசனத்திற்கான தண்ணீர் திறப்பு விநாடிக்கு 16,000 கன அடியாக உள்ளது.

## நெல்லை: காதல் திருமணம் செய்த இளம்பெண் தூக்குப்போட்டு தற்கொலை உதவி கலெக்டர் விசாரணை

திருநெல்வேலி ஜூன் 22

திருநெல்வேலி மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் அருகே உள்ள திருப்பதியாபுரம் பகுதியைச் சேர்ந்தவர் சிவகுமார் மகன் சுப பிரதீப் (29 வயது). இவர் விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள தனியார் ஆலையில் ஒப்பந்ததாரராக வேலை செய்தார். அப்போது அங்கு பணியாற்றிய ஆழ்வார்குறிச்சி அருகே செட்டிகுளத்தை சேர்ந்த மாரி மகள் அருணாவை (24) காதலித்தார். வெவ்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த இவர்கள் இருவரும் பெற்றோர் சம்மதத்துடன் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு கலப்பு திருமணம் செய்து கொண்டனர். தற்போது சிவந்திபுரம் மெயின்ரோட்டில் வாடகை வீட்டில் வசித்து வந்தனர். இவர்களுக்கு செல்வ பிரகதீஷ் (3 வயது) என்ற மகன் உள்ளார். அருணாவுக்கு அடிக்கடி உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் சிகிச்சை பெற்று வந்தார். இவர் நேற்று முன்தினம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கணவருடன் வீடு திரும்பினார். பின்னர் அனைவரும் வீட்டில் தூங்கினர். அப்போது நள்ளிரவில் அருணா திடீரென்று தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். கண்விழித்த சுப பிரதீப் மனைவி தூக்கில் பிணமாக தொங்கியதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து தகவல் அறிந்ததும் விக்கிரமசிங்கபுரம் போலீசார் விரைந்து சென்று, இறந்த அருணாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அம்பை அரசு மருத்துவம



னைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். திருமணமான 4 ஆண்டுகளில் அருணா தூக்குப்போ ட்டு தற்கொலை செய்ததால் உதவி கலெக்டர்மேல்விசாரணை நடத்தி வருகிறார்.

## பட்டியலின மக்கள் மீதான வன்முறைகள் இந்த ஆட்சியில் கொடூர உச்சங்களைத் தொட்டிருக்கிறது நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜூன் 22

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் மாற்று மதப்பெண்ணை காதலித்து திருமணம் செய்யவிருந்த இந்து பட்டியல் சமூக இளைஞரான தனுஷ் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதுவும் அவர் காதலித்த பெண்ணின் வீட்டு மாடியிலேயே அவர் தூக்கிட்டிருப்பது மிகுந்த சந்தேகத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும், அந்தப் பெண்ணின் நெருங்கிய உறவினர்கள் தி.மு.க.வில் உள்ளதாக தகவல்கள் வந்துள்ள நிலையில், இந்த வழக்கு முறையாக விசாரிக்கப்படுமா என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்துள்ளது. நல்ல முறையில் கல்வி கற்று, கோவையில் ஒரு ஐடி நிறுவனத்தில் பணிபுரியும் இளைஞரான தனுஷ் தான் காதலிக்கும் பெண்ணின் வீட்டிலேயே தூக்கிட்டுக் கொண்டார் என்பது நம்பும்படியான செய்தியாக இல்லை.

கடந்த நான்காண்டுகளில் தமிழகத்தில் சீர்குலைந்து போயுள்ள சட்டம் ஒழுங்கு அதளபாதாளத்திற்கு சென்றுவிட்டது. குறிப்பாக, பட்டியலின மக்கள் மீதான வன்முறைகள் இந்த ஆட்சியில் தான் கொடூர உச்சங்களைத் தொட்டிருக்கிறது.

ஆக, இவ்வழக்கில் எவ்வித அரசியல் தலையீடும் இல்லாமல் முறை



யான பிரேத பரிசோதனை செய்து உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டுவர வேண்டியது காவல்துறையினரின் பொறுப்பு. அந்தப் பெண்ணின் குடும்பத்திற்கும், தி.மு.க.விற்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதால் தி.மு.க.வின் வழக்கமான அராஜகப் போக்கிற்கு தமிழகக் காவல்துறை இணங்கக் கூடாது. ஆளுங்கட்சியின் வாக்கரசியலுக்கு துணை போகும் நோக்கத்தோடு ஒருதலை பட்சமாக காவல்துறை செயல்படக்கூடாது.

ஆட்சி மாற்றத்திற்கு இன்னும் ஒரு சில மாதங்கள்தான் உள்ள நிலையில், ஆளும் தி.மு.க.வின் அரசியல் அழுத்தத்திற்கு ஆட்படாமல், இவ்வழக்கின் உண்மைத் தன்மையை விரைவாக வெளிக்கொணர வேண்டுமென தமிழக காவல் துறையினரை வலியுறுத்துகிறேன்.

மேலும், பாதிக்கப்பட்ட அந்த இளைஞரின் குடும்பத்தின் பக்கம் தமிழக பா.ஜ.க. உறுதியாக நிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## கோவில்பட்டியில் நகைகள் திருடிய 4 பேர் கைது: 16 ½ சவரன் தங்கம் பறிமுதல்



தூத்துக்குடி ஜூன் 22

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் உத்தரவின்படி, கோவில்பட்டி உட்கோட்ட டி.எஸ்.பி. ஜெகநாதன் மேற்பார்வையில், கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன், சப் இன்ஸ்பெக்டர்கள் செந்தில்குமார், ராமச்சந்திரன் மற்றும் போலீசார் நேற்று கோவில்பட்டி, இளையரசனேந்தல் சோதனை சாவடி அருகே வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு சந்தேகப்படும்படி இருசக்கர வாகனங்களில் வந்த நபர்களை நிறுத்தி விசாரணை செய்தனர்.

அதில் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தனிஷ்லாஸ் மகன் மோகன் (எ) சகாயராஜ் (வயது 48), சென்னை பள்ளிக்கரணையைச் சேர்ந்த ரமேஷ்பாபு மகன் சதீஷ் (37), சாத்தூர் புல்வாய்பட்டி பகுதியைச் சேர்ந்த சுப்பையா மகன் முத்துராஜா (43) மற்றும் சென்னை அம்பத்தூரைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் மகன் பொன்முருகன் (53) ஆகியோர் என்பதும், அவர்கள் கடந்த 1.6.2025 அன்று கோவில்பட்டி இளையரசனேந்தல் ரோடு சக்கரபாணிநகரைச் சேர்ந்த கிருஷ்ணன் பிள்ளை மகன் நல்லசிவன் (67) வீட்டில் பூட்டை உடைத்து 19½ சவரன் தங்க நகைகள் மற்றும் அரை கிலோ வெள்ளி பொருட்கள் ஆகியவற்றை திருடிய வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்கள் என்பதும் தெரியவந்தது.

உடனடியாக போலீசார் மேற்சொன்ன 4 பேரையும் கைது செய்து அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி, அவர்களிடமிருந்து திருடப்பட்ட நகைகளில் சுமார் 16½ சவரன் தங்க கட்டி மற்றும் அரைகிலோ வெள்ளிக்கட்டி ஆகியவற்றை கைப்பற்றியதோடு, அவர்களை சிறையில் அடைத்தனர். மேலும் இதுகுறித்து கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பிளஸ் 2 பொதுத்தேர்வு: மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்தவர்களின் மதிப்பெண் பட்டியல் 23ம் தேதி வெளியாகும் என அறிவிப்பு

சென்னை, ஜூன் 22

அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

நடைபெற்று முடிந்த மார்ச் 2025 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் எழுதி மறுகூட்டல் (Retotal) மற்றும் மறுமதிப்பீடு (Revaluation) கோரி விண்ணப்பித்தவர்களுள், மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் *www.dge.tn.gov.in* என்ற இணையதளத்தில் (Notification பகுதியில்) 23.08.2025 (திங்கட் கிழமை) அன்று பிற்பகல் வெளியிடப்படவுள்ளது. இப்பட்டியலில் இடம் பெறாத பதிவெண்களுக்கானவிடைத்தாட்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.




மறுகூட்டல்/மறுமதிப்பீட்டில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் மட்டும். மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண்கள் அடங்கிய மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய தேர்வர்களுக்கு அசல் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும் தேதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. என தெரிவிக்கப்பட்டுள்ளது

## கீழடிக்காக அ.தி.மு.க. குரல் கொடுக்காதது ஏன்? அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கேள்வி

சென்னை ஜூன் 22

அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழர் நாகரீகம் உலகின் மூத்த நாகரீகம் என நிறுவும் கீழடி சான்றுகளை அவமதிக்கும் மத்திய அரசின் அலட்சியத்தையும், மாற்றாந்தாய் மனப்பான்மையையும் எதிர்க்கட்சியான அ.தி.மு.க. இப்போது வரை கண்டிக்காதது ஏன்? கீழடிக்காக அ.தி.மு.க. குரல் கொடுக்காதது ஏன்?

பா.ஜ.க.விடம் கூட்டணியில் இருப்பதன் ஒரே காரணத்திற்காக தமிழரின் தொன்மையான நாகரிகத்தைக் காக்க குரல் கொடுக்காமல் 'உறங்குவது ஏன்' என்ற நியாயமான கேள்வியை எழுப்பிய தி.மு.க. ஐ.டி. விங்கின் பதிவிற்கு, தகாத அர்த்தங்களைக் கற்பித்து நமது எதிர்கட்சியினர் தங்களைத் தாங்களே ஏன் தாழ்த்திக் கொள்கிறார்கள்?

நியாயமாக வந்திருக்க வேண்டிய கோபம் என்ன? தொன்மை தமிழர் நாகரீகத்தின் ஆதாரமான கீழடியை புறங்கையில் தள்ளும் மத்திய மைனாரிட்டி பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகளுக்கு அல்லவா கோபம் வந்திருக்க வேண்டும்? இப்போது வரை அப்படியொரு கோபம் மத்திய அரசின் மீதும், பா.ஜ.க. மீதும் அ.தி.மு.க.விற்கு வரவேயில்லையே ஏன்?

மத்திய அரசின் வஞ்சகத்தை ஒருசேர எதிர்த்து நிற்க வேண்டிய நேரத்தில் இப்படி திசை திருப்பும் வேலைகளில் அற்பமாக இறங்குவது தமிழர் விரோத செயல் இல்லையா? எதிர்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் இன்று BP எகிறி கதறிக் கொண்டிருக்கிறார் என்று உடன்பிறப்புகள் தெரிவித்தனர். ஆனால் தமிழ் வளர்த்த மதுரையைச் சேர்ந்த அண்ணன்கூட இதுவரை கீழடிக்காக குரல் கொடுக்கவில்லையே? எது தடுக்கிறது?

என் மீது அவர் காட்டும்



கோபம் ஏன்தமிழர்பெருமையை சிதைப்பவர்கள் மீது வரவில்லை? இன்று கூட மதுரையின் பெருமைக்காக அவர் பாய்ந்து எழாமல் "கீழடியை வைத்து நமது தொன்மையை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை" என்று சொன்னவர் பேட்டி அளித்தது ஏன்!

தி.மு.க. ஐ.டி. விங் உடன்பிறப்புகளே! எதிர்கட்சியினரின் அவதூறுகளை, என் மீதான அவர்களின் விமர்சனங்களை நான் பார்த்துக்கொள்கிறேன். பாவம், உண்மை தெரிந்தும் யாரோ சொல்லி சாடுகிறார்கள். அந்த அரசியல் எனக்கு தெரியும். நீங்கள் உங்கள் உழைப்பை இந்த கவனச் சிதறல்களுக்கு இரையாக்க வேண்டாம்! கழக மாணவரணி கீழடிக்காக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறார்கள். அதன் தாக்கத்தை மடைமாற்றவே அ.தி.மு.க.வினர் கண்டதை வைத்து கம்பி கட்டுகிறார்கள்.

நாங்கள் கலைஞரின் வார்ப்புகள். எவர் எதிர்வரினும், எந்த இடர் வரினும், தமிழ்நாட்டின் நலனுக்காகவும், தமிழர் நலனுக்காகவும் இந்தப் போர் தொடரும். தமிழினத்தின் உரிமைக்காக போராடும், இரத்தம் சிந்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் நாங்கள்! இனத்தை, மொழியை அழிக்க நினைப்பவர்களுக்கும், துணை போகிறவர்களுக்கும் எதிரான முன்கள வீரர்களான தி.மு.க. ஐ.டி. விங்கின் பணி தொடரும். கேள்விகளும் தொடரும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

22.6.2025

# பள்ளி தோழனை நம்பியதால் நடந்த விபரீதம் காரில் அழைத்து சென்று பெண் பலாத்காரம்



குழித்துறை, ஜூன் 22

குமரி மாவட்டம் அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த 35 வயதுடைய ஒரு பெண்ணுக்கு கணவரும், 2 குழந்தைகளும் உள்ளனர். அந்த பெண் ஒரு துணிகடையில் வேலை செய்து வருகிறார். இந்த பெண்ணும் அதே பகுதியை சேர்ந்த 35 வயதுடைய ஒரு வாலிபரும் பள்ளிக்கூடத்தில் ஒன்றாக படித்துள்ளனர். இதனால் பார்க்கும் போதெல்லாம் அந்த பெண்ணிடம் வாலிபர் நன்றாக பேசுவார்.

இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் அந்த பெண் தனது உறவினர்வீட்டுதிருமணத்திற்கு பஸ்சில் சென்று விட்டு மீண்டும் இரவு 9 மணியளவில் குழித்துறை சந்திப்பில் பஸ்சில் வந்து இறங்கினார். பின்னர் வீட்டிற்கு செல்வதற்காக பஸ்சுக்காக குழித்துறை பஸ் நிறுத்தத்தில் காத்திருந்தார்.

அப்போது அந்த வாலிபர் காரில் அங்கு வந்தார். அவர் அந்த பெண்ணிடம், காரில் வீட்டில் கொண்டு விடுவதாக கூறினார். அந்த பெண்ணும் தன்னுடன் படித்தவர் என்ற முறையில் அவரது அழைப்பை ஏற்று காரில் ஏறி பின் இருக்கையில் அமர்ந்து கொண்டார். இதையடுத்து காரை வாலிபர் ஓட்டி சென்றார்.

சிறிது தூரம் சென்றதும் அந்த வாலிபர் காரை திடீரென தனது வீட்டிற்கு செல்லும் பாதையை நோக்கி திருப்பினார். அதுபற்றி அந்த பெண் கேட்டபோது, 'நீ எனது வீட்டிற்கு வந்து எனது மனைவியையும், குழந்தைகளையும் பார்த்து விட்டு போ' என்று கூறியுள்ளார்.

நண்பர் என்ற முறையில் அந்த பெண் சந்தேகப்படவில்லை. பின்னர் அவர் காரை தனது வீட்டில் நிறுத்திவிட்டு அந்த பெண்ணை வீட்டுக்குள் அழைத்துள்ளார். அவரது பேச்சை நம்பிய அந்த பெண் காரில் இருந்து இறங்கி வீட்டுக்குள் சென்றார். அப்போது வீட்டில் வேறு யாரும் இல்லை என்பது தெரியவந்தது.

இதையடுத்து அந்த வாலிபர் திடீரென வீட்டின் கதவை மூடினார். இதனால் அச்சமடைந்த அந்த பெண் சத்தம் போட்டார். உடனே வாலிபர், பெண்ணின் வாயைப் பொத்தி அவரை அறைக்குள் இழுத்து சென்று வலுக்கட்டாயமாக பலாத்காரம் செய்தார்.

பின்னர் அந்த வாலிபர், 'இந்த சம்பவம் குறித்து வெளியே சொன்னால் உன்னையும் உன் குழந்தைகளையும் கொன்று விடுவேன். உன் கணவரை கார் ஏற்றி கொன்று விடுவேன்' என்று மிரட்டி உள்ளார். அத்துடன் அந்த பெண்ணை காரில் ஏற்றி அவரது வீட்டிற்கு போகும் வழியில் இறக்கி விட்டார்.

அந்த பெண் தனது வீட்டிற்கு சென்ற பின்பு இந்த சம்பவம் பிறருக்கு தெரிந்தால் அவமானம் ஏற்படும் என்பதால் யாரிடமும் கூறவில்லை. மேலும் அவர் மிகுந்த மன உளைச்சலில் இருந்தார். இதை கவனித்த கணவர் அவரிடம், ' சில நாட்களாக ஏன் இப்படி ஒரு மாதிரியாக இருக்கிறாய்' என்று ஆறுதலாக கேட்டார். உடனே அந்த பெண்நடந்தசம்பவத்தை கணவரிடம் சொல்லி அழுதார்.

இதைகேட்டு அதிர்ச்சி அடைந்த கணவர், அந்த வாலிபரின் வீட்டிற்கு சென்று அவருடைய மனைவியிடமும், அம்மாவிடமும் நடந்த சம்பவத்தை சொல்லுமாறு பெண்ணை அனுப்பி வைத்தார். அதை தொடர்ந்து அந்த பெண் வாலிபரின் வீட்டிற்கு சென்றார். அங்கே வாலிபரும், அவரது மனைவியும், தாயும், அக்காவும் இருந்தனர்.

அப்போதுஅந்தபெண், வாலிபரின் குடும்பத்தினரிடம்நடந்த சம்பவத்தை எடுத்து சொல்லி அவரை கண்டிக்குமாறு கூறினார். உடனே வாலிபரின் அக்கா அந்த பெண்ணிடம் தகராறு செய்து செருப்பு, கம்பால் சரமாரியாக தாக்கினார். மேலும் அந்த வாலிபர் ஆபாசமாக பேசியதுடன் 'நீ பொய் சொல்கிறாய்' என கையால் தாக்கி, காலால் வாயில் மிதித்தார். இதில் காயமடைந்த பெண் அங்கிருந்து தப்பி வந்தார்.

இதுகுறித்து அந்த பெண் மார்த்தாண்டம் அனைத்து மகளிர் போலீசில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பஸ் பயணம் : எந்தெந்த இடங்களில் டோக்கன்கள் வழங்கப்படுகிறது..?



சென்னை, ஜூன் 22

சென்னை மாநகர போக்குவரத்து கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தில், சென்னையை சேர்ந்த மூத்த குடிமக்களுக்கான ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பயன்படுத்தக்கூடிய ஒரு மாதத்துக்கு 10 டோக்கன்கள் வீதம் 6 மாதத்துக்கான கட்டணமில்லா பஸ் பயண டோக்கன்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் ஜூலை 31ந் தேதி வரை தினமும் காலை 8 மணி முதல் இரவு 7.30 மணி வரை வழங்கப்படும்.

இந்த டோக்கன்கள் அடையாறு, பெசன்ட் நகர், திருவான்மியூர், மந்தைவெளி, தியாகராய நகர், சைதாப்பேட்டை, சென்டிரல் ரெயில் நிலையம், பிராட்வே, குரோம்பேட்டை, பல்லாவரம், ஆலந்தூர், கிண்டி எஸ்டேட், அய்யப்பன்தாங்கல், வடபழனி, கே.கே.நகர், ஆதம்பாக்கம், அண்ணாநகர், கோயம்பேடு, அம்பத்தூர் எஸ்டேட், அம்பத்தூர் ஓ.டி., ஆவடி, அயனாவரம், ஐ.சி.எப்., தண்டையார்பேட்டை, சுங்கச்சாவடி, எண்ணூர், வியாசர்பாடி, மாதவரம், பாடியநல்லூர், செங்குன்றம், தாம்பரம் மெப்ஸ், பூந்தமல்லி, பெரம்பூர், வள்ளலார் நகர், செம்மஞ்சேரி, திருவொற்றியூர், கிளாம்பாக்கம், குன்றத்தூர் ஆகிய 40 பணிமனை பஸ் நிலையங்களில் வழங்கப்படுகிறது.

இருப்பிட சான்றாக ரேஷன் அட்டை, வயது சான்றிற்காக ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம், கல்வி சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை போன்றவையும் மற்றும் 2 கலர் புகைப்படங்களும் கொடுத்து டோக்கன்களை பெற்றுகொள்ளலாம். அடையாள அட்டை புதுப்பித்தல், புதிய பயனாளிகளும் இதில் பயன்பெறலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (22.6.2025)

**மேஷம்:** உழைப்பிற்கு TODAY நல்ல பரிசு கிடைக்கும். வேலை வாய்ப்பு தேடுவோருக்கு சிறந்த வாய்ப்பு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**ரிஷபம்:** நிதி நிலை சீராகும். பழைய கடன்கள் தீர்க்கப்படும். வீட்டில் சில சின்ன சிக்கல்கள் இருந்தாலும் நீடிக்காது.

**மிதுனம்:** புதிய முயற்சியில் வெற்றி. வியாபாரத்தில் லாபம். பழைய நண்பரிடமிருந்து நல்ல செய்தி வரும்.

**கடகம்:** உடல் ஆரோக்கியத்தில் சிறு கவலை. மனஅழுத்தம்இருக்கும். ஆனாலும் குடும்ப ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்:** வாழ்க்கையில் முன்னேற்றம். அலுவலகத்தில் உங்கள் கருத்து மதிக்கப்படும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.

**கன்னி:** அறிவுக் கூர்மை அதிகரிக்கும். போட்டிப் பரீட்சை எழுதுபவர்களுக்கு சாதகமான நாள். உணவில் கவனம் தேவை.

**துலாம்:** வீட்டு வேலைகளில் பிஸியாக இருப்பீர்கள். உறவுகளில் அன்பும் பாசமும் அதிகரிக்கும். வீண் சண்டைகளை தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** சிறந்த வாய்ப்பு காத்திருக்கிறது. தொழிலில் லாபம். பழைய சிக்கல்கள் தீரும். நண்பர்களுடன் சந்தோஷமான சந்திப்பு.

**தனுசு:** புதிய திட்டங்களை தொடங்க நல்ல நேரம். மனைவி/கணவருடன் நேரம் செலவிடுவதால் உறவு மேம்படும்.

**மகரம்:** செயல்களில் சீரும் சுகமும் இருக்கும். நிலம் தொடர்பான விஷயங்களில் சாதகமான தீர்வு. பணவரவு உயரும்.

**கும்பம்:** சிறு சிக்கல்கள் இருந்தாலும், நீங்கள் புத்திசாலித்தனமாக தீர்வுகளை காண்பீர்கள். நண்பர்களிடம் உதவி கிடைக்கும்.

**மீனம்:** இனிமையான நாள். கல்யாணம் தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம். பயணம் ஒருவேளை ஏற்படலாம்.

# நாட்டு வெடிகுண்டு வீசி பிறந்தநாள் கொண்டாடிய வாலிபர்.. அடுத்து நடந்த சம்பவம்



செங்கல்பட்டு ஜூன் 22

செங்கல்பட்டு நகர போலீஸ்நிலைய எல்லைக்குட்பட்ட செங்கல்பட்டு டவுன் பகுதியை சேர்ந்தவர் தீபக் (வயது 21) இவர் தனது பிறந்த நாளை நண்பரான தேவ் (22) மற்றும் மேலும் சிலருடன் கொண்டாடினார். கேக் வெட்டிய பின்னர் தேவ் தனது நண்பர் தீபக்குக்கு பிறந்த நாள் பரிசாக நாட்டு வெடிகுண்டை வழங்கி அதனை வீச சொல்லி உள்ளார்.

கையில் நாட்டு வெடி குண்டை வாங்கிய தீபக் அதனை வீசி வெடிக்க செய்து வீடியோவாக பதிவு செய்து இன்ஸ்டாகிராமில் பதிவேற்றம் செய்தார். இந்த காட்சிகள் இன்ஸ்டாகிராமில் வைரலாக பரவிய நிலையில் அதனை பார்த்தவர்கள் போலீசாருக்கு வீடியோ காட்சிகளை பகிர்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் அளித்தனர்.

அதன் அடிப்படையில் தீபக்கை போலீசார் தீவிரமாக தேடிவந்தனர். தன்னை தேடுவதை அறிந்த தீபக் தலைமறைவாக இருந்தார். தொடர்ந்து தனிப்படை அமைக்கப்பட்டுதீபக்கை போலீசார் தேடி வந்தனர்.

போலீசாரின் பிடியில் இருந்து தப்ப முயன்ற தீபக்கை போலீசார் துரத்தி செல்லும் போது கால் தவறி கீழே விழுந்ததில் அவரது வலது காலில் முறிவு ஏற்பட்டது. அவர் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் தீபக்குக்கு காலில் மாவு கட்டு போடப்பட்ட நிலையில் அவரை போலீசார் கைது செய்து செங்கல்பட்டு குற்றவியல் நடுவர் கோர்ட்டில் ஆஜர் படுத்தினர்.

# மோகன்லாலின் ஊட்டி பங்களாவின் ஒரு நாள் வாடகை இவ்வளவா?



மலையாளத் திரையுலகின் புகழ்பெற்ற நடிகராக இருக்கும் மோகன்லாலுக்குச்சொந்தமானஊட்டிபங்களாவில்பயணிகள்தங்குவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.அது தொடர்பான அனைத்துத்தகவல்களும் தற்போது சுற்றுலா வழிகாட்டும் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருப்பதால் மக்கள் பலரும், அங்கு தங்கிச் செல்ல ஆர்வம் காட்டி வருகிறார்கள்.பொதுவாக திரைப்பிரபலங்கள் என்றால், பல்வேறு தொழில்களில் முதலீடு செய்வார்கள். ஏராளமான சொத்துகள், வீடுகள் இருக்கும். இதுபோலவே, ஏற்கனவே நடிகர் மம்முட்டி, கேரளத்தில் உள்ள தனது வீட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வாய்ப்பை வழங்கினார்.

ஆனால், இங்கு ஒரு குடும்பம் தங்குவதற்கு ரூ.75,000 வாடகையாக வசூலிக்கப்பட்டது. இது ஒரு நாள் வாடகை.அந்த வகையில், தற்போது மோகன்லாலின் ஊட்டி பங்களாவும் வாடகைக்குக் கிடைக்கிறது. முன்பு, இதனை மோகன்லால் தனக்கும், குடும்பம் மற்றும் நண்பர்களின் சொந்தப் பயன்பாட்டுக்கு மட்டும் பயன்படுத்தி வந்துள்ளார்..தற்போது, தனியார் சுற்றுலா அமைப்பு மூலம் இந்த வீடு சுற்றுலாப் பயணிகள் ஒரு சில நாள்கள் தங்கிச் செல்ல வாடகைக்கு விடப்படும் என்ற அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. ஊட்டியிலிருந்து வெறும் 15 நிமிடத்தில் இங்குச் செல்லலாம் என்றும், ஒரு நாள் வாடகை ரூ.37,000 என்றும், இணையதளம் மூலம் முன்பதிவு செய்து கொள்ளும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது

# "குபேரா" படக்குழுவினரை பாராட்டிய சாய் பல்லவி




தனுஷின் 51வது திரைப்படமான 'குபேரா' படம் இன்று திரையரங்குகளில் வெளியாகியிருக்கிறது. இயக்குநர் சேகர் கம்முலா இப்படத்தை இயக்கியிருக்கிறார். ஸ்ரீவெங்கடேஸ்வரா சினிமாஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தில் நடிகர் தனுஷ், நாகர்ஜுனா, ராஷ்மிகா மந்தனா போன்றோர் நடித்திருக்கிறார்கள்.இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். இந்த படமானது மும்பை தாராவியை மையமாக வைத்து அரசியல் திரில்லர் ஜானரில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் உருவாகியுள்ள இப்படம் பான் இந்தியா அளவில் வெளியாகியுள்ளது.

இப்படம் வெளியாகி இருக்கும் நிலையில் படக்குழுவினரை வாழ்த்தி நடிகை சாய் பல்லவி தனது எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவு ஒன்றைப் பதிவிட்டிருக்கிறார். அவர் வெளியிட்டிருக்கும் பதிவில், "குபேரா படம் சிறப்பான ஒரு படமாக இருக்கப் பல காரணங்கள் இருக்கின்றன. தனுஷ் சாரின் மாஸ்டர்கிளாஸ் நடிப்பு , சவாலான கதாபாத்திரங்களைத்தேர்ந்தெடுத்துஅதைஎளிதாகதிரையில்காண்பிக்கிறார்.சேகர்கம்முலாஇயக்கத்தில்நாகார்ஜுனாவை ஒரு கொலையாளி கதாபாத்திரத்தில் பார்ப்பது ஒரு விருந்தாக இருக்கும்

டியர் ராஷ்மிகா, சேகர் காரு தனது பெண் கதாபாத்திரங்களை எவ்வளவு சக்திவாய்ந்ததாகவும், தனித்துவமாகவும் எழுதுகிறார் என்பது நமக்குத் தெரியும். இது ரஷ்மிகாவுக்கு மறக்க முடியாத கதாபாத்திரமாக அமையும். ராக்ஸ்டார் டிஎஸ்பி அவர்களே, உங்களின் தொடர்ச்சியான வெற்றிப் படங்களின் வரிசையில் இந்தப்படமும் அமையும். உங்கள் தொப்பில் மற்றுமொரு இறக்காக இந்தப்படம் இருக்கும். .சூரி, அஜய், ஸ்வரூப், படக்குழு அனைவரின் ரத்தமும் வியர்வையும் பாராட்டுகளாக மாறும்.

ஏசியன் சினிமாஸும் பரிசுத்த இதயமான சேகர் கம்முலா சாரும் இணைவது மகத்தான கூட்டணியாக இருக்கும்.இந்தத் தலைமுறையின் உத்வேகம் நீங்கள் சேகர் கம்முலா சார். அதில் நானும் ஒருத்தி. எனது குரு மகிழ்ச்சியாகவும் உடல் நலத்துடனும் இதுபோல் பல கதைகளை எடுக்கவும் வாழ்த்துகிறேன். இன்று அனைவருக்கும் மகிழ்ச்சி பொங்க வேண்டிக்கொள்கிறேன்" என்று 'குபேரா' படக்குழுவை வாழ்த்தி இருக்கிறார்.


நடிகைசாய்பல்லவிசேகர்கம்முலாஇயக்கத்தில்பிடா, லவ்ஸ்டோரி ஆகிய படங்களில்நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# டி ராஜேந்தர் குரலில் "ஆரோமலே" படத்தின் "டண்டணக்கா லைப்" பாடல் வெளியீடு

பிரபல யூடியூபரான கிஷன் தாஸ் தற்போது அடுத்தடுத்த படங்களில் ஹீரோவாக நடித்து வருகிறார். அந்த வகையில் இவர் ஏற்கனவே 'முதலும் நீ முடிவும் நீ' என்ற படத்தில் நடித்திருந்தார். இந்த படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. அதை தொடர்ந்து சிங்க், தருணம் ஆகிய படங்களில் நடித்திருந்தார்.

அதே சமயம் யூடியூபர் ஹர்ஷத் கான், விஜே சித்துவுடன் இணைந்து பல வீடியோக்களை பதிவிட்டு இளைஞர்களை கவர்ந்து வருகிறார். கடந்த பிப்ரவரி மாதம் வெளியான 'டிராகன்' திரைப்படத்தில் இவர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இது தவிர விஜே சித்து இயக்கி நடிக்க உள்ள 'டயங்கரம்' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ள புதிய படத்திலும் நடிக்க உள்ளார் ஹர்ஷத் கான். கிஷன் தாஸ், ஹர்ஷத் கான் ஆகிய இருவரும் இணைந்து புதிய படம் ஒன்றில் நடிக்க உள்ளனர். இந்த படத்தை மினி ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரிக்கிறது. சாரங் தியாகு இந்த படத்தை இயக்க சித்து குமார் இதற்கு இசையமைக்கிறார். கௌதம் ராஜேந்திரன் இதன் ஒளிப்பதிவு பணிகளை கவனிக்கிறார். இந்த படத்திற்கு 'ஆரோமலே' என்று தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது. இப்படம் தொடர்பாக புரோமோ வீடியோ வெளியாகி வைரலானது. கலகலப்பான, வித்தியாசமான இந்த புரோமோ வீடியோ ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்று இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்நிலையில் 'ஆரோமலே' படத்தின் 'டண்டணக்கா லைப்' எனத்தொடங்கும் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்பாடலை விஷ்ணு எடாவன் வரிகளில் டி. ராஜேந்தர் பாடியுள்ளார்.

# பாரிஸ் டயமண்ட் லீக் ஈட்டி எறிதல்: பட்டம் வென்றார் நீரஜ் சோப்ரா




இந்தியாவின் நீரஜ் சோப்ரா நேற்று (வெள்ளிக்கிழமை) இரவு (உள்ளூர் நேரப்படி) பாரிஸ் டயமண்ட் லீக் பட்டத்தை வென்றதன் மூலம் உலக அரங்கில் தனது ஆதிக்கத்தை மீண்டும் நிரூபித்தார்.

முன்னதாக நேற்று நடைப்பெற்ற போட்டியின் முதல் சுற்றிலேயே 88.16 மீட்டர் தூரம் எறிந்தார். நடு சுற்றுகளில் மூன்று புள்ளிகள் இல்லாத போதிலும், அவரது தொடக்க முயற்சியே போட்டி முழுவதும் அவரை முதலிடத்தில் வைத்திருக்க போதுமானதாக இருந்தது.

நீரஜ் சோப்ரா ஆரம்பத்தில் தனது தொனியை அமைத்து, தனது முதல் முயற்சியிலேயே 88.16 மீட்டர் தூரம் எறிந்தார், இதன்மூலம் உடனடியாக முன்னிலை வகித்தார். ஜெர்மனியின் ஜூலியன் வெபர் 87.88 மீட்டர் தூரம் எறிந்தநிலையில் அவர் தோல்வியடைந்தார். பிரேசிலின் மௌரிசியோ லூயிஸ் டா சில்வா 86.62 மீட்டர் தூரம் எறிந்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

தொடக்க சுற்றில், சோப்ரா களத்தில் முன்னிலை வகித்தார், அதைத் தொடர்ந்து வெபரின் 87.88 மீட்டர் மற்றும் டிரினிடாட் மற்றும் டொபாகோவின் கெஷோர்ன் வால்காட் 80.94 மீட்டர் தூரம் எறிந்தனர். இரண்டாவது சுற்றில், வெபர் சுருக்கமாக 86.20 மீட்டர் எறிதலை இணைத்தார், அதே நேரத்தில் நீரஜ் 85.10 மீட்டர் எறிந்தார், வால்காட் சற்று முன்னேறி 81.66 மீட்டராக பதிவு செய்தார். இருப்பினும், சோப்ராவின் தொடக்க எறிதல் ஒப்பிடமுடியாததாகவே இருந்தது.

மூன்றாவது சுற்றில் டா சில்வா 86.62 மீட்டர் தூரம் எறிந்து தனது முத்திரையைப் பதித்தார். வெபர் நான்காவது சுற்றில் 83.13 மீட்டர் தூரம் எறிந்தும், ஐந்தாவது சுற்றில் 84.50 மீட்டர் தூரம் எறிந்தும் தாமதமாக சவால் விட முயன்றார், ஆனால் அவரால் 88 மீட்டர் தூரத்தை தாண்ட முடியவில்லை.

இறுதி சுற்றில், நீரஜ் 82.89 மீட்டர் தூரம் எறிந்தும், வெபர் 81.08 மீட்டர் தூரம் எறிந்தும், டா சில்வா 78.56 மீட்டர் தூரம் எறிந்தும் மீண்டும் களத்திற்குத் திரும்பினார்.

போட்டியின் நடுவில் ஏற்பட்ட முரண்பாடுகள் இருந்தபோதிலும், முதல் சுற்றில் சோப்ராவின் ஒற்றை அசத்தலான எறிதல் தீர்க்கமானதாகவும் வெற்றியை உறுதிப்படுத்த போதுமானதாகவும் நிரூபிக்கப்பட்டது.

இரண்டு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா அடுத்த மாதம் 5 ஆம் தேதி நடைபெறும் நீரஜ் சோப்ரா கிளாசிக்கின் தொடக்கப்பதிப்பில் விளையாடுகிறார்.

நீரஜ் சோப்ரா கிளாசிக் முதலில் கடந்த மே 24ஆம் தேதி நடத்த திட்டமிடப்பட்டது, ஆனால் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லை தாண்டிய பதட்டங்கள் காரணமாக அடுத்த மாதம் 5 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சில விஷயங்கள் நட்சத்திரங்களில் எழுதப்பட்டுள்ளன சுப்மன் கில்லுக்கு யுவராஜ் சிங் வாழ்த்து

இந்தியாஇங்கிலாந்து இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி லீட்சில் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதனைதொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன ஜெய்ஸ்வால் கே.எல்.ராகுல் ஜோடி வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தது. நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் இங்கிலாந்து அணியின் பந்துவீச்சுக்கு தண்ணி காட்டினர். 24.5 ஓவர்களில் முதல் விக்கெட்டுக்கு 91 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. கே.எல். ராகுல் 42 ரன்களில் ஆட்டமிழந்தார். பிரைடன் கார்ஸ் இங்கிலாந்து அணிக்கு முதல் விக்கெட்டை கைப்பற்றி கொடுத்தார். அடுத்து அறிமுக வீரரான சாய் சுதர்சன் களமிறங்கினார். அவர் 4 பந்துகள் மட்டுமே எதிர்கொண்ட நிலையில் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சில் டக் அவுட் ஆகி வெளியேறினார். தொடர்ந்து கில் களமிறங்கினார். கில், ஜெய்ஸ்வால் இருவரும் இணைந்து இங்கிலாந்து அணியின் பந்துவீச்சை துவம்சம் செய்தனர். மறுபுறம் சிறப்பாக விளையாடி ஜெய்ஸ்வால் சதமடித்து அசத்தினார். அவர் 101 ரன்களில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து மண்ணில் விளையாடிய அறிமுக டெஸ்ட் இன்னிங்ஸில் சதமடித்த 5வது இந்திய வீரராக யஷஸ்வி ஜெய்ஸ்வால். புதிய சாதனை படைத்தார். இதனையடுத்து. கில்லுடன் ரிஷப் பண்ட் ஜோடி சேர்ந்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த ஜோடியில் சுப்மன் கில் தனது சதத்தை பதிவு செய்து அசத்தினார். சுப்மன் கில் கேப்டனாக அறிமுகம் ஆன முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சிலேயே சதம் அடித்தார். இதன்மூலம் அறிமுகமான முதல் போட்டியிலேயே சதம் அடித்த ஐந்தாவது இந்திய வீரரானார் சுப்மான் கில். அவரைத்தொடர்ந்து ரிஷப் பண்ட் தனது அரை சதத்தை பதிவு செய்தார். தற்போது இந்திய அணி முதல்நாள் ஆட்டநேர முடிவில் 85 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 359 ரன்கள் எடுத்துள்ளது. அதில் கேப்டன் சுப்மன் கில் 127 ரன்களும், ரிஷப் பண்ட் 65 ரன்களும் எடுத்து ஆட்டம் இழக்காமல் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து அணியின் சார்பில் அதிகபட்சமாக பென் ஸ்டோக்ஸ் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். நாளைஇரண்டாவதுநாள்ஆட்டம்நடைபெறுகிறது.இந்நிலையில்சிலவிஷயங்கள்நட்சத்திரங்களில்எழுதப்பட்டுள்ளன என்று சுப்மன் கில்லுக்கு இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளபதிவில், "சில விஷயங்கள் நட்சத்திரங்களில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன.. டெஸ்ட் கேப்டனாக உங்கள் முதல் வெளிநாட்டு சதத்திற்கு வாழ்த்துக்கள் சுப்மன் கில்..

இது எவ்வளவு பெரிய பொறுப்பு என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளீர்கள்.. மேலும் உங்கள் பேட்டை எல்லாவற்றையும் பேச அனுமதித்துள்ளீர்கள்.. சபாஷ் எல்லோருக்கும்" என்று யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.